பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

PHYSICS
90 A/L
ஒளியியல்
சௌந்தி B. Sc: Hons
சனி ஞா. 9—10
NIRU TUITION
CENTRE,
KONDAVIL.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2.

CHEMISTRY
90 A/L
சனி, ஞா. 8—9
பொது இரசாயனம்
செல்வா B. Sc (Hons)
நிரு டியூசன்
சென்ரர்
கோண்டாவில்.

கடர்: 3 யாழ்ப்பாணம் | விபவ ஞு புரட்டாதி மீ 25 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 29 ( 11 10 – 1988 ) | UTHAYAN-A lively Tamil Daily | கலர்: 206

மாகாண சபைத் தேர்தல்:

# ஐ.தே.க, முஸ்லிம் காங்கிரஸ்

# கடைசி நேரத்தில் களத்தில்

## வடமாவட்டங்கள் ஐந்திலும் ஈ.பி.ஆர். எல்.எவ், ஈ. என். டி. எல். எவ். இரண்டும் போட்டியின்றித் தெரிவு

யாழ்ப்பாணம், அக்டோபர் 11

வடக்கு—கிழக்கு மாகாணசபைத் தேர்தலில், இரண்டு கட்சிகள் மட்டும் போட்டி இல்லாமல் தெரிவாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய கிழக்கு மாவட்டங்களில், கடைசி நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமது வேட்பாளர்களை நிறுத்தி தேர்தல் களத்தில் குதித்தன. நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்குரிய கடைசி நாளான நேற்று அவை தமது வேட்பாளர்களின் பட்டியல்களைத் தாக்கல் செய்தன.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களிலும் வேறு கட்சிகள் சார்பில் வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யாததால் ஈ. பி. ஆர். எல் எவ். கட்சியும், ஈ என். டி எல் எவ் கட்சியும் போட்டியின்றித் தெரிவாகின

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் ஈ என். டி. எல். எவ். கட்சியும், யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியும் தெரிவாகி உள்ளன.

அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நேற்று ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி தனது வேட்பாளர் பட்டியல்களைத் தாக்கல்செய்தது

இம் மாவட்டங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தனது பட்டியல்களைத் தாக்கல்செய்து தேர்தலில் குதித்தது

திருகோணமலை மாவட்டத்தில் சுயேச்சைக் குழு ஒன்றும் நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்தது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஈ பி ஆர் எல் எப். கட்சி தனது வேட்பாளர் பட்டியலை கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்திருந்தது.

எனவே மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மும்முனைப் போட்டியும், திருகோணமலையில் நான்கு முனைப் போட்டியும் இடம்பெற வுள்ளன

யாழ்ப்பாணம், கிளி

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடா நாட்டின் பலபகுதிகளும் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம் அக் 11

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளும் நேற்று ஸ்தம்பித நிலையை அடைந்தன.

அக்டோபர் பத்தாம் திகதியை நினைவுகூருமுகமாக இத்தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு யாழ்ப்பாண மாணவர் ஒன்றியப்புக் குழு வேண்டுகோள்விடுத்திருந்தது தென்மராட்சி பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் ஹர்த்தால், துக்க தினம் அனுஷ்டிக்கத் தென்மராட்சிப் பிரசைகள்குழுகோரிக்கைவிடுத்திருந்தது.

நேற்றுக் தனியார் பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன அரச பஸ்கள் சேவையில் ஈடுபட்டதாயினும் நண்பகலுடன் அந்தச் சேவைகளும் நிறுத்தப்பட்டன

குடாநாட்டின் பலபகுதிகளிலும் கடைகள், அரச அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன

யாழ்ப்பாண நகரில்மக்

(8 ம் பக்கம் பார்க்க)

## வடமத்திய மாகாணத்தில் 45 சிங்கள மக்கள் கொலை

### இரவுநேரக் கோரத் தாக்குதல்

கொழும்பு அக் 11

வட மத்திய மாகாணத்தில் மக்கடஸ்ஸல என்னும் கிராமத்தில் ஞாயிற்று கிழமை இரவு நடத்தப்பட்ட கோரமான தாக்குதல் ஒன்றில் 45 சிங்களவர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது

.....கள் கோஷ்டி ஒன்று இத் தாக்குதலை நடத்திய தாகக் கூறப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் 14 ஆண்கள், 13 பெண்கள், 18 குழந்தைகள் அடங்குவர்.

ஒன்பது பேர் படுகாயமடைந்தனர்.

75 முதல் 100 பேர் வரை அங்கம் வகித்த அந்த இனந் தெரியாத கோஷ்டி குண்டுகள், வாள்கள், கத்திகள் சகிதம் தாக்குதலை நடத்தியது என்று கூறப்பட்டுகிறது.

இலங்கை வானொலி. இறந்தவர்களின் எண்

(8 ம் பக்கம் பார்க்க)

## வழமைக்குத் திரும்பியது

யாழ்ப்பாணம், அக்.11

கச்சேரிப் பகுதி நேற்று நண்பகலுக்குப் பின் வழமைக்குத் திரும்பியது.

கடந்த நான்கு நாட்களாக கச்சேரியைச் சூழவுள்ள பகுதியில் பொது

8 ம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



தென்னிலங்கையிலும் ஹெலித் தாக்குதலாம்... தெற்கு வடக்காக மாறி வருகுது போலை... அப்பிடித்தானே...!

## ஆரம்ப ஆசிரியர்கள் நியமனப் பட்டியல் இங்கு வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், அக் 11

ஆரம்ப ஆசிரியர்களின் நியமனப்பத்திரப் பட்டியல் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு வந்துசேர்ந்தது.

ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவை முன்பயிற்சியை முடித்தவர்களுக்கே நியமனம் வழங்கப்பட உள்ளது.

இவர்களுக்கான பாடசாலைகள் ஒதுக்கப்பட்டதும் இன்னும் சில தினங்களில் நியமனங்கள் உத்தியோகபூர்வமாக அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது

# தெற்கில் வீதிக் கிளர்ச்சி!

# பொலிஸ் நிலையங்கள் மீது தாக்கு!!

கொழும்பு அக்டோபர். 11

தென்னிலங்கையில் நேற்று இடம்பெற்ற பெரும அளவிலான ஹர்த்தால், வீதிக் கிளர்ச்சியாகவும், பொலிஸ் இராணுவ நிலையங்கள் மீதான தாக்குதல்களாகவும் மாறியது.

பல முக்கிய நகரங்களில் ஐயாயிரம், மூவாயிரம் என்று ஆயிரக்கணக்கான கிளர்ச்சிக்காரர்கள் கிரண்டு பொலிஸ் நிலையங்கள் மீதும், இராணுவத்தினர் மீதும் தாக்குதல் நடத்தினர்.

குண்டு வெடிப்புச் சம்பவங்கள், தீ வைப்புச்சம்பவங்களும் பரந்த அளவில இடம்பெற்றன.

கந்தறை பொலீஸ் நிலையம் மீது நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில 2 ஆயிரம் பேர் கொண்ட கூட்டம ஒன்று தாக்குதல் நடத்தியது

இத்தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும், தாக்குதல் நடத்தியவர்கள் பலர் உயிரிழந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

ஊருபொக்க பொலீஸ் நிலையத்தின் மீதும் இதுபோன்ற தாக்குதல் நடத்தப்பட்டது அதுவும் முறியடிக்கப்பட்டது. தாக்குதலை நடத்தியோர் பலர் கொல்லப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

ஹோமகமையில் வீதிக் கிளர்ச்சி புரிந்த 5 ஆயிரம் கிளர்ச்சிக்காரர்களை பொலீஸாரும் இராணுவத்தினரும் கலைத்தனர்

தெவிநுவரவில் பாதுகாப்புப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 4 பேர் காயமடைந்

8 ம் பக்கம் பார்க்க)

## நிலைமையை நேரில் கண்டறிய டென்மார்க் குழு இலங்கை வருகிறது

கொழும்பு, அக் 11

இலங்கைத் தமிழர்களின் தற்போதைய நிலவரம் சம்பந்தமாக அறிவதற்கு டென்மார்க்கிலிருந்து ஒரு குழு நவம்பர் மாதம அளவில இலங்கை வரவுள்ளதாகத் தெரிகிறது

இந்தக் குழு வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்து இங்கு உள்ள நிலைமைகளை நேரில் கண்டறியும்.

இந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையிலேயே டென்மார்க்கில் உள்ள தமிழ் அகதிகளின் எதிர்காலம் அமையும்.

இலங்கைத் தமிழ் அகதிகள் அதிகமாக உள்ள நாடுகளில் டென்மார்க்கும் ஒன்றாகும்

இங்கு உள்ள அகதிகளுக்கு ஓரளவு சலுகைகளும், கல்வி வசதிகளும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது

### சுபநேரம்

11 - 10 - 1988
புரட்டாதி - 25
செவ்வாய்க்கிழமை
சுப நேரம்:-
10-32 முதல் 12-02 வரை
ராகு காலம்:-
03-02 முதல் 04-32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நல்லூர் ...த்கிரி விரதாரம்பம் ஆஸ்வீ சுத்தம்

### செய்திச் சாரம்

## இன்றும் பாடசாலைகள் மூடப்படும்

கொழும்பு, அக். 11

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளும் இன்று செவ்வாய்க்கிழமையும் மூடப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் சிபார்சுக்கு இணங்க இந்தமுடிவு எடுக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்தது.

(அ-எ)

## சிகிச்சை நிலையம் இன்று இயங்கும்

யாழ்ப்பாணம் அக் 11

யாழ். செயலகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள மார்புச் சிகிச்சை நிலையம் இன்று மீண்டும் இயங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது

கடந்த வெள்ளி, சனி திங்கள் ஆகிய மூன்று நாட்களும் இந்த நிலையம் இயங்காததால் பல நோயாளர்கள் உரிய காலத்தில் சிகிச்சை பெற முடியாமல் இருந்தது.

(அ-க)

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம் அக் 11

மானிப்பாய்ப்பகுதியில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்

பாலசிங்கம் கண்ணன் [வயது 19] என்ற இந்த இளைஞர் தற்போது யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை இச்சம்பவம் நடைபெற்றது.

[இ-10]

## யுத்த நிறுத்தத்துக்கு அரசு தயாராம்

கொழும்பு, அக் 11

தென் மாகாணத்திலும் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வர இலங்கை அரசு தயாராக உள்ளது.

அதற்கான விருப்பத்தை தீவிரவாதிகள் முதலில் வெளியிட வேண்டும்.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத் முதலி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் (எ)

## கிரனேட் வெடித்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், அக் 11

கல்வியன்காட்டில் கிரனேட் வெடித்ததில் வயோதிபர் ஒருவர் காயம் அடைந்தார்.

நேற்று மாலை 4 மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

செல்லப்பா தர்மலிங்கம் (வயது 51) என்ப

(8ஆம் பக்கம் பார்க்க)

## 3 மாவட்டங்களில் நவ. 19 இல் தேர்தல்

கொழும்பு அக் 11

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்குரிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் அடுத்த (நவம்பர்) மாதம் 19 ஆம் திகதி நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். தேர்தல் இடம்பெறும் மாவட்டங்களில் போட்டியிடும் கட்சிகள் வருமாறு;

திருகோணமலை மாவட்டம்
1. ஈ. பி. ஆர். எல எப்
2. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
3. ஐ. தே. க
4. சுயேச்சைக் குழு

மட்டக்களப்பு மாவட்டம்
1. ஈ. பி ஆர். எல் எப்
2. ஐ. தே. க
3. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

அம்பாறை மாவட்டம்
1. ஈ. பி ஆர் எல். எப்
2. ஐ. தே. க
3. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (அ-எ)

## கிளர்ச்சிக்காரர் மீது தெற்கில் ஹெலித் தாக்கு

கொழும்பு, அக். 11

தென் இலங்கையில் பொலீஸ் நிலையங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை முறியடிக்கத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்களையும் ஆயுதப்படையினர் பயன்படுத்தினர் என்று பி. பி சி. நேற்று அறிவித்தது.

ஊருபொக்க பொலீஸ் நிலையத்தைத் தாக்கிய ஆயிரக்கணக்கானோர் மீது ஹெலிகொப்டர் தாக்குதல நடத்தப்பட்டது. அப்போது இரண்டு பேர் உயிரிழந்தனர். 12 சிவிலியன்கள் காயமடைந்தனர்.

இதுபோன்று கந்தறை, ஹோமகம ஆகிய இடங்களிலும் ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தியே கிளர்ச்சிக்காரர்களின் தாக்குதலை ஆயுதப்படையினர் முறியடித்தனர்.

கந்தறையில் நடத்தப்பட்ட ஹெலிக்கொப்டர் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர் என்றும் பி பி சி மேலும் தெரிவித்தது.

(அ எ)

## யாழ் குடா நாட்டின் 1ஆவது எயிட்ஸ் நோயாளி நேற்று மரணமானார்

யாழ்ப்பாணத்தின் முதலாவது எயிட்ஸ் நோயாளி நேற்று அதிகாலை மரணமானார்.

வெளிநாடு ஒன்றில் இருந்து 6 மாதத்திற்கு முன்னர்தான இவர் நாடு திரும்பியிருந்தார்.

47 வயதான மேற்படி நபர் கரவெட்டியைச் சேர்ந்தவர். 3 பிள்ளைகளுக்குத் தந்தை

இவர் இதுவரை காலமும் ஆஸ்பத்திரி ஒன்றில் தனியான பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

(அ-க-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தரமான அலுமினியப் பாத்திரங்கள். பொங்கல் பானைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். பிள்ளையார், 259 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (7095)

P L-4 லேத் மெசின் விற்பனைக்குண்டு. பிள்ளையார். 259, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். (7096)

உபயோகித்த வீட்டுத் தளபாடங்கள் Ceiling Fan, Room Heater, மகாராஜா ஹோல் செற் T.V Stand. கண்ணாடி மேசை, Kenwood Electric Cooker, Oven, சாப்பாட்டு மேசை, கதிரை, Office மேசை, மெஷின், கட்டில் மெத்தை, Record player, கிளாஸ் வகை மற்றும் பலவித பொருள்களும் உடன் விற்பனைக்குண்டு. பழைய நம் 14/1, அம்மன் வீதி. கந்தர்மடம், யாழ்ப்பாணம். [6986)

## கோழிக் குஞ்சு விநியோகம்

புரொயிலர் குஞ்சுகள் (Cristombu Farm Baira Farm) 10, 11, 12, 13 ஆந் திகதிகளில் விநியோகிக்கப்படும். பதிவு செய்ய; சற்குண ராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7093)

## இறைச்சிக் கோழிகள்

Broilers இறைச்சிக் கோழிகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். நல்லூர் வீடியோ சென்ரர், நல்லூர்; யாழ்ப்பாணம். [6989]

## UPLANDS FARM கோழிக்குஞ்சு விநியோகம்

ஒவ்வொரு வாரமும் (Lohmann) பிறவுண் பேட்டுக்குஞ்சு சேவல் குஞ்சு கறுப்பு [பிலிமத்] வரிக்குஞ்சு, புரொயிலர் குஞ்சு; குறைந்தவிலைக்கு விநியோகிக்கப்படும். உடனே பதிவுசெய்யவும். இல:9, கந்தையா லேன், சூராவத்தை ரோட், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அருகில்.) (7089)

## கோழிக்குஞ்சு விநியோகம்

கோல்டன் கொமற் பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் Hisex பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள், Hyline பேட்டுக் குஞ்சுகள், Hyline கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், புரொயிலர் குஞ்சுகள் 14ஆந்திகதி வெள்ளிக் கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்ய: சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படிலேன் கொக்குவில். (7092)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre கோழிக் குஞ்சுகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், நல்லூர், யாழ்ப்பாணம். (6988)

## கோழிக்குஞ்சு விநியோகம்

புரொயிலர் கோழிகள் (Broiler) விருத்துக் குஞ்சுகள் தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா பாம், செம்மாத் தெரு, யாழ்ப்பாணம். (C/570)

## திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

## உடன் தேவை

பேப்பர் வெட்டும் இயந்திரம் [Paper Cutting Machine] உடன் தேவை. வைத்திருப்பவர்கள் அதற்கான விலையுடன் விண்ணப்பிக்கவும். இல; 384, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [C571/

## கல்வி

### புத்தகம்

இந்து நாகரிகத்தில் கலைகள் G. C. E. A/L, G. A. Q. இராமநாதன் நுண்கலைப் பிரிவுத் தேர்வுகளுக்கு இன்றியமையாததோர் உதவி நூல்; ஆக்கியோன்: K M. செல்வரத்தினம் B A Hons. Dip in Hindu Civilization (முன்னாள் சமஸ்கிருத விரிவுரையாளர் அரசினர் ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி) கிடைக்குமிடம். பூபாலசிங்கம்& ஸ்ரீலங்கா புத்தகசாலை. (7086)

### அனுமதிப் பரீட்சை ஆண்டு 6

6 ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சைக்கான [கணிதம், தமிழ்] மாதிரிப் பயிற்சிப் புத்தகம் வெளியாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல புத்தகசாலைகளிலும் புதிய கல்வி நிலையத்திலும் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூபா 14/50 [7077]

### A/L இரசாயனம்

108, Brown Road A/L 89 இரசாயனம் மீட்டல் ஆசிரியா சந்தீஸ் ஆரம்பம் 11-10 88 செவ்வாய் 7 15a.m. [செவ், வியா, 7. 15a m. பௌதிக இரசாயனம்] திங், புத, வெள்ளி, 7. 30 a.m. சேதன இரசாயனம். (7082)

### 6 ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சை

யாழ் மாவட்டத்தில் பிரபலம்பெற்ற தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் 6 ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சைக்குரிய கணிதம், தமிழ் பாடக்கைநூல் எம்மிடம் விற்பனைக்குண்டு ஆக்கியோன் ஆ. ந. இராசேந்திரன், Dlp-in-Accy விலை 40.00 பூபாலசிங்கம் புத்தகசாலை, மத்திய பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (6957)

### மிருதங்க வகுப்புகள்

மிருதங்க வித்துவான் க. ப. சின்னராசா அவர்களால் சுன்னாகத்தில் நடத்தப்படுகின்ற மிருதங்க வகுப்புகளுக்கு புதிதாகச் சேரவிரும்புவோர் எதிர்வரும் விஜய தசமி தினத்தில் காலை நடத்தப்படும் விசேட வகுப்பில்சேர்ந்துகொள்ளலாம். தொடர்பு; [1] க சின்னராசா, மயிலணி சுன்னாகம். (2) ஏ. நீட்ஸ் கே.கே.எஸ்ரோட். சுன்னாகம். [7094]

### சேவை

எங்கள் நடைபாதை ஸ்தாபனம் இன்று தொடக்கம் மாலை 6. 00 மணி வரை திறந்திருக்கும். யாழ். சைனீஸ் றெஸ்ரோறன்ற், பிறைவேட் லிமிட்டட். முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (7073)

### அறிவித்தல்

கடந்த 8 ஆம் திகதி யாழ். புகையிரத நிலையத்திலிருந்து ''ஏசியா'' துவிச்சக்கரவண்டி தவறுதலாக என்னால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரத்துடன் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்: S G. இரத்தினசிங்கம், தபாற்கந்தோர் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய் [6985)

### தவறிவிட்டது

க. கனகசபை என்பவராகிய எனது அடையாள அட்டை இல: 422183604 v தெல்லிப்பளைக்கும் மாவிட்டபுரம் கோவிலுக்கும் இடையே K K S. ரோட் மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து திரு. க. கனகசபை, பளை மேற்கு, மாவிட்டபுரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். (C/569)

---

**'ஓராண்டுஉந்தனுக்கு ஓடிவிட்டதுவோ'**

### தி. கதிர்காமதாஸ்

(போதனாசிரியர், தாதியர் பயிற்சி கல்லூரி யாழ்ப்பாணம்)

'' ஓராண்டு உருண்டோடியது இன்று
நீர் மாண்டு சோதியுடன் கலந்து
நீர் இருந்த காலத்தில்
இயம்பிய வார்த்தைகள்
கடந்து விட்ட காலத்தில்
கரைந்து சென்ற நிகழ்ச்சிகள்
கறை படிந்த காயங்களாய்
காண்கிறது எம்மனதில்
சோகங்களை மட்டும்
சுமையாகத் தந்து சென்று
ஆண்டொன்று சென்றிட்டு
அகல் விளக்கின் ஒளி அணைந்து - உம்
இலட்சியங்கள் ஈடேற
இறைவனையே இறைஞ்சுகின்றோம் ''

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
தாதியர் பயிற்சிப் பாடசாலை,
யாழ்ப்பாணம். (6984)

---

## ஆங்கில உதவி ஆசிரியர் தெரிவுக்கான ★ போட்டிப்பரீட்சை ★

நவம்பர் 12 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

## 1 மாத துரித பயிற்சி வகுப்புக்கள்

''யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்கள் இணைந்த சேவை''

திரு. T. N. பஞ்சாட்சரம் ✲ திரு. S. மூர்த்தி ✲ திரு. K. சபாநாயகம்

பாடநெறி:
1. Comprehension
2. Knowledge of Language
3. Integrated Skills
4. Writing Skills

**ஆரம்பம்: 15 - 10 - 88 பிற்பகல் 1·00 மணி**

- இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
- பரீட்சைக்குரிய வினா - விடைப்பயிற்சிகள்

வகுப்புக்கள்:- சனி, ஞாயிறு — விடுமுறை தினங்களில் பிற்பகல் 1-00 மணிமுதல் 4-00 மணி வரை

நடைபெறும் இடம்:- அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் (கிளை) 101/10 ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

கட்டணம்: ரூபா 150. 00

குறிப்பு:- விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 29 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விபரங்களுக்கு:-

**ASTAN INSTITUTE**
166/1, Hospital Road, - JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளைக் கட்டிடம் 1ஆம் மாடி) (C-565)

---

தொழில் - முறைசாரா - வாழ்க்கைத்திறன்

# கல்வியின் முக்கியத்துவத்தை மாணவர் - பெற்றோர் உணர வேண்டும்

## கல்விப்பணிப்பாளர் உரை

மானிப்பாய், அக்.11

தொழிற்கல்வி, முறைசாராக் கல்வி, வாழ்க்கைத் திறன் கல்வி ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பெற்றோர்கள், மாணவர்கள் உணர வேண்டும்.

கொக்குவில் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்கு கல்லூரி அதிபர் திரு அ. பஞ்சலிங்கம் தலைமை வகித்தார்.

அண்மைக்கால அசம்பாவிதங்களினால் இக் கல்லூரிக்கு ஏற்பட்ட இழப்புக்களை பற்றி அதிபர் திரு. பஞ்சலிங்கம் தமது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டு உரையாற்றினார்.

இக்கல்லூரிக்கு சுமார் 15லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த இழப்பை கல்லூரி தாங்கிக்கொள்ளும் நிலையில் இல்லை. அரசாங்க உதவிகளும் உடனடியாகக் கிடைக்க மாட்டா. கல்லூரிச் சமூகமும் கடந்தகால அசம்பாவிதங்களால் வீடு, வாசல், பொருள், பண்டங்களை இழந்துள்ளது எனவே அவர்களின் உதவியையும் நாடமுடியாது

எனவே பெற்றோர்கள், நலன்விரும்பிகள் தம்மால் இயன்ற உதவிகளை அளிக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

விழாவில் செல்வி. வை. சிவசக்தி வரவேற்புரை நிகழ்த்தினார்.

திருமதி புஸ்பவதி சபாநயகம் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

கல்லூரி அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. க. வை. சிவனேசன் நன்றிஉரை கூறினார்.

மாணவர்களின் நடனம், மெல்லிசை போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (இ- 90)

## அறிமுகக் கண்காட்சி

யாழ்ப்பாணம் அக். 11

''விடியலை நோக்கிய விதைப்பு' புத்தக அறிமுகக் கண்காட்சியும் விற்பனை அரங்கும் எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில்நடைபெறும்.

வல்வை மகளிர் கல்லூரியில் காலை 9-00மணி முதல் மாலை 5-00 மணி வரை இவை இடம் பெறும்.

மாணவ இளைஞர் பொதுமன்றம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (இ-க)

## செயற் குழுக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம் அக 11

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராம சேவை அலுவலகங்களும் கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள் கிராம மக்களுக்கான உணவு முத்திரைத் திட்டம், புனர்வாழ்வுத்திட்டம் மற்றும் வறிய மக்களுக்கான உதவிப்பணம் வழங்கும் திட்டம் ஆகியவற்றை மேற் கொள்ள வேண்டும்.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபரை மகஜர் மூலம் கோருவது என்று யாழ் மாவட்ட சனசமூக நிலையங்கள் ஒன்றியத்தின் செயற் குழுக் கூட்டத்தில் அண்மையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. (ஐ)

# சைவத் தொண்டை மேலெடுத்துச் செல்லும் திருத்தல பாத யாத்திரை

மானிப்பாய், அக். 11

தமிழ் ஈழ மண்ணில் வந்து தென்மராட்சிப் பகுதியில் ஆற்றிய பாரிய ஆத்மீக சேவையால் இந்துசமய மக்களிடையே ஒரு விழிப்புணர்வையும், எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளார் ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா. நாயன்மார்களும் சைவப் பெரியார்களும் செய்த சைவத் தொண்டைமேலெடுத்து செல்லும் திரு முத்தையாவின் நோக்கம் வீணாக மாட்டாது.

தமிழ் மக்களின் ஆத்மீக நலன் கருதி அமைதியும் சுபீட்சமும் வேண்டி திரு. நா. முத்தையா தலைமையில் மேற் கொள்ளளப்பட்ட திருத்தல பாத யாத்திரையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய துர்க்கா துரந்தரி செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினார்.

புன்னாலைக் சட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் ஆலயத்திலிருந்து இது ஆரம்பமானது.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. அ. மகாலிங்சம் விழாவில் ஆசியுரைவழங்குகையில் சைவ மதத்தின் தொன்மையையும் காலத்துக்குக் காலம் அதற்கேற்பட்ட சோதனைக் காலத்தில் நாயன்மார்கள், அடியார்கள் காட்டிய வழி முறையையும் நினைவுபடுத்தி, இன்றைய எம் கஷ்ட கால நிவிர்த்திக்கான வழி திருத்தல யாத்திரை தான் எனக் கூறினார்.

ஆத்மஜோதி திரு .நா, முத்தையா பேசுகையில்; இறை நாம பஜனையும், திருமுறை ஒலியும் தமிழர் ஒற்றுமையாகவும் சுபீட்சமுமாக வாழ வழி வகுக்கும் என்றார்.

உடுவில் உதவி அரச அதிபர் திரு. அ. மகாலிங்சம், கிராம சேவையாளர்கள் சைவ அன்பர்கள், ஆலயமுகாமையாளர்கள், பரிபாலன சபையினர் - தொண்டர்கள் நூற்றுக்கணக்கில் கூடி இப்பாத யாத்திரையை மேற் கொண்டனர். [ச-90]

## கசிப்பு விற்பனை

முல்லைத்தீவு அக் 11

முல்லைத்தீவுப் பட்டின எல்லைக்குள் பரவலாகக் கசிப்பு விற்பனை நடைபெறுகின்றது என்று கூறப்படுகிறது. (இ-92)

---

## தேவை

பிளேட்டின் மெஷின் மைண்டர் உடன்தேவை.

நேரில் வரவும்:

**செட்டியார் அச்சகம்**
428, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
[C/568]

## பியோன் தேவை

10 - 10 - 88 அன்று (திங்கள்) நடைபெற இருந்த நேர்முகப் பரீட்சை 12 - 10 88 (புதனகிழமை) காலை 10 மணிக்கு நடைபெறும்.

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**
166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)
(C/388)

## ஓராண்டு நினைவஞ்சலி



### கனகரத்தினம் இராமநாதன்

| ஆண்டவன் படைப்பு: | அநியாய அழிப்பு: |
|---|---|
| 1954 - 05 - 07 | 11 - 10 - 1987 |

அன்புடனும், பண்புடனும் எம்முடன் பழகிய இனிமையான நண்பனே! எத்தனையோ கற்பனைகளை உன்மனதில் வைத்திருந்தாய். படிப்படியாக உன் தொழிலில் முன்னேறினாய். கண்ணுக்குத் தெரியாமல் உடன் உயிர் பறிக்கும் மின்னுடன் விளையாடினாய். ஆனால் நீ ஷெல் என்னும் உருவில் வந்த காலனால் இளமையிலேயே ஆறாத் துயரில் மீளாத்துயில் கொண்டாய். உனக்கு எமது ஓராண்டுக் கண்ணீர் அஞ்சலிகள்.

உன் பிரிவால் வாடும்:

**மத்திய மின்சார சபை மின்பகுதி நண்பர்கள்.**

சுன்னாகம். (7175)

## சவூதி அரேபியாவுக்கு

### உடனடி வேலை வாய்ப்பு

1. வைத்தியசாலை சுத்திகரிப்பாளர்
2. வைத்தியசாலை வாட் ஊழியர்

இப்பதவிகளுக்கு பெண்கள் தேவை

ஆங்கில அறிவு அவசியம்

வயது: 25 — 39 வரை

உணவு, தங்குமிடவசதி, இலவசம்

Contract : 3 வருடம்

தொடர்பு:

**ABRAJ**
452/3, Sir, Chittampalam A. Gardiner Mawatha,
COLOMBO - 2.
Licence No. 78 (7174)

---

யாழ், பல. நோ. கூ. சங்கம்-வரையுள்ளது

## வெற்றுச் சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 3835 வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு. கேள்வி விண்ணப்பம்ஏற்றுக்கொள்ளும் முடிவுத்திகதி 14 - 10 - 88 ஆகும். கேள்வி விண்ணப்பங்கள் அரக்கு முத்திரை போடப்பட்டிருத்தல் வேண்டும்.

— பொது முகாமையாளர்.

259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
10. 10. 88 (C/572)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நடன, சங்கீத மிருதங்க வகுப்புக்கள்

மன்னார், அக் 11

மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் நடன, சங்கீத, மிருதங்க வகுப்புகள் எதிர்வரும் 20 ஆம் திகதி விஜயதசமி விழா அன்று ஆரம்பமாகவுள்ளன.

கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முழு ஆதரவுடன் இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது (இ)

# சலுகை அல்ல; சட்டபூர்வ நியாயத்தையே கேட்கிறோம்

## மக்கள் வங்கி சுற்று நிருபம் குறித்து அடகு வைத்தோர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம் அக் 11

எமது சங்கம் மக்கள் வங்கியிடம் சலுகை கேட்கவில்லை சட்டபூர்வமான நியாயங்களையே கேட்கிறது.

இவ்வாறு யாழ் நகை அடகு வைத்தோர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் வருமாறு.–

"மக்கள் வங்கி சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்ட சலுகைகள்" பற்றி நகை அடகு வைத்தோர் சங்கம் அடகு வைத்தோரின் நலன் கருதி அறிக்கை ஒன்றை விடுவதற்கு கடமைப்பட்டுள்ளது.

எமது சங்கம் மக்கள் வங்கியிடம் சலுகை கேட்கவில்லை. எமது நியாயமான சட்டபூர்வமான கோரிக்கைகளை மட்டுமே நிதி அமைச்சருக்குச் சமர்ப்பித்திருந்தோம் இதுவரை அவரிடமிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை

எமது கோரிக்கைகளாவன:

★ 1984 ஆம் ஆண்டு அடகு நகைகளை கொழும்பிற்கு கொண்டுசென்ற நாள் முதல் எதுவித வட்டியும் அறவிடக் கூடாது அப்படி அறவிடுவது ஒப்பந்தத்திற்கு முரணானது.

★ முதலையும், வட்டியையும் செலுத்தியவர்களுக்கு அந்தப் பணம் செலுத்திய நாளிலிருந்து அடகு நகைகள் மீளளிக்கப்பட்ட நாள் வரை அல்லது மீளளிக்கப்படும் நாள் வரை வட்டி மீளளிக்கவேண்டும்

ஆகவே 1-1-84 இல் இருந்து 31-12-87 வரை 20 சதவீதமோ அல்லது 15 சதவீதமோ வட்டி அறவிடுவது ஒப்பந்தத்திற்கு முரணானது.

1-1-88இல் இருந்து வட்டி அறவிடுவதில்லை என்பது முதலிலும் பார்க்க வட்டித்தொகை மேலும் கூடிவிடும் என்பதற்காகவே செய்யப்பட்டது. இது சலுகை ஆகாது.

முதலிலும் பார்க்க வட்டிகூட அறவிடக் கூடாதென்று இவ்வளவு காலத்திற்கு பின் மக்கள் வங்கியின் சுற்று நிருபத்தில் கூறப்பட்டிருப்பது சலுகை அல்ல. அது சட்டத்திற்கு மாறானது என்பதை வங்கி ஏற்றுக்கொண்டதை காட்டுகின்றது.

இச் சட்டம் இருந்தும் மக்கள் வங்கி இதுவரை இச்சட்டத்திற்கு மாறாக முதலிலும் பார்க்ககூடிய வட்டி அறவிட்டிருக்கிறது அப்படி அச் சட்டத்திற்கு மாறாக அறவிட்ட பணத்தை திருப்பிச் செலுத்த முடியாதென்று கூறப்படுவதும் சட்டவிரோதமானதே.

எமது சங்கம் கூடிய செதியில் கூட இருக்கும் விசேஷ பொதுக் கூட்டத்தில் எடுக்கவிருக்கும் தீர்மானம் வரை சங்க அங்கத்தவர்கள் மக்கள் வங்கியில் இது விடயமாக பணம் செலுத்த வேண்டாமென்று மீண்டும் வேண்டுகின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)



சமீபத்தில் பூஸாவிலிருந்து விடுதலையாகி யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வழியில் திருமலை வந்து இறங்கிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலரைப் படத்தில் காணலாம்.

திருமலை மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி, திருமலை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த திரு. கே. பத்மநாதன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (இ-10)

### பூஸாவுக்கு இடம்மாற்றம் செய்யப்படுவர்

கொழும்பு, அக் 11

நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல கைதிகளும், பூஸா மத்திய முகாமிற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

அவர்கள் புரிந்ததாகக் கூறப்படும் குற்றங்களுக்கு ஏற்ப பிரிக்கப்பட்டு பூஸாவில் தனித்தனியாக வைக்கப்படுவர் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ எ)

### ஒட்டுசுட்டானில்

ஒட்டுசுட்டான் அக் 11

ஒட்டுசுட்டான் நகரில் முகாமிட்டிருக்கும் இந்தியப்படையினர் கடந்த புதன்கிழமை காலை நகரைச் சுற்றி வளைத்து சுற்றுடலிலுள்ள சுமார் 300 பேரை முகாமுக்கு கூட்டிச் சென்றனர். (ச-113)

### இந்து இளைஞர் மன்றம் உதவி

மட்டக்களப்பு, அக். 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் அசம்பவிதங்களின் போது குடும்பத் தலைவனை இழந்த 23 விதவைகளுக்கு இந்து இளைஞர் மன்றம் ரூபா 33,000 நிவாரணம் வழங்கி உள்ளது.

ரூ. 1000 முதல் ரூ. 2 500 வரை ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டன. (இ 21)


## நவராத்திரி நல்வாழ்த்துக்கள்

எங்கும் நிறைந்த எம் அன்னை பராசக்தி எல்லோர் உள்ளத்திலும் இல்லத்திலும் இனிய நிறுவனங்களிலும் என்றும் இலங்கிட வாழ்த்துகிறோம்.

இன்றைய நிலையையும் இனிவரும் தேவைகளையும் எண்ணிப் பணிபுரிய எல்லோர் இணைவையும் வேண்டுகின்றோம்.

கட்டடத் திருத்தங்கள், கல்விச்சாதனங்கள், உடை, நாளாந்த உணவு சுகாதாரம் அவசியம். நூல் நிலைய வளர்ச்சிக்கும் தொழிற்கூட அமைப்புக்கும் உதவிகள் தேவை. கல்வி புகட்டவும் தொண்டர்கள் தேவை.

நிதியாகவும் பொருளாகவும் உதவியோருக்கு எம் மனமார்ந்த வணக்கங்கள். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுவர் நிறைவாழ்வு இல்லம்
&
சைவ வித்தியா விருத்திச் சங்கம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (6983)


# அளவெட்டியில் கால்வாய் நோய் பரவும் அபாயம்

மானிப்பாய் அக் 11

வேகமாகப் பரவிவரும் கால்வாய் நோயினால் அளவெட்டிப் பகுதியில் உள்ள மாடுகள் பெரிதும் பாதிப்புற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இந்நோய்க்குக் காரணியான வைரஸ், காற்றின் மூலமும் நேரடித் தொடர்பினாலும் மாடுகளுக்குப் பரவக் கூடியது.

கால்வாய் நோய் பரவாது தடுப்பதற்கான தடுப்பூசி மருந்து தெல்லிப்பளை அரசாங்க கால்நடை வைத்தியர் டாக்டர் திருமதி சு. தனபாலசிங்கத்திடமிருந்து இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:–

கால்வாய் நோய் ஏற்படுவதனால் மாடுகளின் உற்பத்தி குறைவதோடு பொருளாதார நஷ்டமும் ஏற்படும் பாலுற்பத்தி குறைவடையும்

இந்நோய் கண்டமாட்டின் வாய், நாக்கு, குளம்பின் இடைகள் ஆகியவற்றில் சிறு கொப்புளங்கள் தோன்றும் இவை பின் உடைந்து புண்களாக மாறும்

வாயிலிருந்து வீணீர் வடிவதோடு மாடு நொண்டத்தொடங்கும் பின்னர் உணவு உண்ண முடியாமல் இறக்க நேரிடும்.

இந்நோயிலிருந்து மாடுகளைப் பாதுகாக்க பண்ணையாளர்கள் முன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்நோய்க்கான தடுப்பூசிகளை உடனடியாக இலவசமாக பெற்று மாடுகளுக்குக் கொடுக்க வேண்டும்.

கால் நடை விற்பனை மற்றும் கொள்வனவுகளையும் பொது மேய்ச்சல் நிலங்களுக்கு மாடுகளை கொண்டு செல்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்

— இப்படிக் அவர் கோரிக்கை விடுகிறார். (உ 90)

### ஆங்கிலதின-நூலக திறப்பு விழாக்கள்

குருநகர், அக் 11

குருநகர் சென்: ஜேம்ஸ் மகாவித்தியாலய ஆங்கிலதின விழாவும், நூலகத் திறப்பு வைபவமும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும்.

யாழ்- மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வித்தியாலய அதிபர் திரு அ ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் வைபவங்கள் நடைபெறும். (இ- 51)

# முல்லைத்தீவுப்பகுதியில் நெல்விலை உயர்வு

ஒட்டுசுட்டான் அக் 11

முல்லைத்தீவுப் பகுதியில் நெல்லின் விலை திடீரென உயர்ந்துள்ளது

கடந்த மாதம் ஒரு மூடை நெல் (69 கிலோ) ரூபா 300/– ஆக விலைப்பட்டது.

தற்பொழுது திடீரென ரூபா 400/- ஆக உயர்ந்துள்ளது.

மேலும் இவ்வருட இறுதிக்குள் ரூபா 500-/ வரை விலை உயருமென எதிர்பார்க்கப்படுகிறது (இ-113)

### தளபாட பற்றாக்குறை

பண்டத்தரிப்பு அக். 11

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலையில் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப மேசை கதிரைகள் இல்லாதனால் மாணவர் தரையில் இருந்து கல்வி கற்கும் நிலை உருவாகியிருக்கிறது (உ-120)

### உலக உணவு தினம்

மானிப்பாய் அக் 11

உலக உணவு தினம் எதிர்வரும் 16 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது

இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளிலும் உலக உணவு தினம் சம்பந்தமான கொண்டாட்டங்கள் நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டிருக்கின்றது (உ 90)

### மின்தாக்கி மரணம்

சங்கானை அக் 11

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் உப அலுவலக மின்னியலாளர் மின்சாரம் தாக்கிப் பலியானார்.

சிவசோதி உருத்திரநாதன் (சங்கானை) என்ற இளைஞரே பலியானவராவார். (ச 29)

தேர்வுப் பரீட்சை நடத்த முன்

# பதில் அதிபர்களை நிரந்தரமாக்குங்கள்

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் மகஜர்

சம்மாந்துறை அக் 11

பாடசாலைகளில் நீண்டகாலமாகப் பதில் அதிபர்களாகக் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு நிரந்தர அதிபர் நியமனம் வழங்க வேண்டும். 2 ஆம் 3 ஆம் அதிபர்களாகக் கடமை புரிவோருக்கு சேவை மூப்புக்கு அமைய பதவி உயர்வுகள் வழங்க வேண்டும். அதன் பின்னர், முதலாம் தர இரண்டாம் தர அதிபர்களுக்கான தேர்வுப் பரீட்சையை நடத்த வேண்டும்.

இவ்வாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கல்முனை மாவட்டக்கிளை கல்வி அமைச்சரையும் கல்விச்சேவை ஆணைக்குழுவையும் கோரியுள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கக் கல்முனை மாவட்டக் கிளைச் செயலாளர் ஜனாப. ஏ. எல். எம். அமீன் இது தொடர்பான மகஜரை அனுப்பி வைத்துள்ளார்.

பல அதிபர்கள் சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக இரண்டாம் மூன்றாம் தர அதிபர்களாகக் கடமைபுரிகின்றனர்.

ஐம்பதைக் கடந்த வயதை அடைந்த இவர்கள் தமது அடுத்த பதவி உயர்வைப் பெற வேண்டின் மேற்குறித்த பரீட்சைக்குத் தோற்றியே ஆகவேண்டியுள்ளது

கல்வி அமைச்சின் இந் நடவடிக்கை அதிபர்கள் மத்தியில் மிகக் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.

ஏற்கனவே இந்த அரசாங்கம் எதுவித பரீட்சையுமின்றி பதில் கடமை புரிந்த பலருக்கு நிரந்தர நியமனம் வழங்கியுள்ளது.

அப்படியிருக்க திடீரென ஆம்பாது பரீட்சை ஒன்றை நடத்தி பதவி உயர்வு வழங்க முனைந்துள்ள செயல் விந்தையானது என்று ஜனாப் அமீன் 'உதயனி டம்' தெரிவித்தார். (உ-ச-14)


## "M" THREE TRAVEL

பெருமையுடன் வழங்கும் உடனடி

# வேலை வாய்ப்புக்கள்

கீழ்க்காணும் வெற்றிடங்கள் தற்போது எம்மிடம் உண்டு. உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்யப்படும்.

**சவூதி அரேபியா**

1. Labourers (கூலியாட்கள்)
2. Heavy Vehicle Maintenance Helpers / பார வாகன பராமரிப்பு உதவியாளர் } 2 இடம்
3. Generator Operators (மின்சார இயந்திர இயக்குனர்

(ஓவர்டைம், தங்குமிடவசதி, உணவுவசதி)

**Open Visa**

25 வயதிற்கு மேற்பட்டவர்கள் மாத்திரம்
25 Container Driver (பொருள் பெட்டி சாரதி)

**800 றியால்ஸ்**

(ஓவர்டைம், தங்குமிடவசதி, உணவுவசதி)

நம்பிக்கை நாணயம் என்பனவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

"M" THREE TRAVEL

✶ புதிதாகக் கடவுச்சிட்டு செய்ய விரும்புபவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சிட்டு எடுத்துக் கொடுக்கப்படும்.

✶✶ எங்களிடம் புதுக் கடவுச்சிட்டு செய்பவர்கள் எங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினால் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்.

✶✶✶ பொன்ட் (Bond) செய்து கொடுக்கப்படும்.

இவை எல்லாவற்றிற்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

த. இந்திரநாதன்

சோதி லேன்,
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

No. 1, 2ஆம் ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C 561)



ஸ்கந்தஷஷ்டி - சூரசம்ஹார தினத்தில் - திருச்செந்தூரில்

1/6 ஆவது தென் இந்திய சமய சரித்திர கலாசார யாத்திரைச் சுற்றுலா

திருச்செந்தூர் - மதுரை - மட்ராஸ் - திருப்பதி - மைசூர் - பெங்களூர்

10-11-88 தொடக்கம் 16 நாட்கள்

விபரங்களுக்கு: ராஜா ரூர்ஸ், 168/1 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

அதிபர்: வி. அமிர்தலிங்கராஜா (சமாதான நீதிவான்) (7148)



# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லி.   Pfizer   சில்லறை விலை ரூ.39/90 200 மி. லி.

®பைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியக் கண்காட்சி

ஓவியர் அனுஷியாவின் ஓவியக் கண்காட்சி சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளது.

**13 ஆம் திகதி வியாழன்**
பிற்பகல் 2.00 மணிமுதல் 5 00 மணி வரை

**14 ஆம் திகதி வெள்ளி**
காலை 9.00 மணிமுதல் 5.00 மணி வரை

**15 ஆம் திகதி சனி**
நண்பகல் 12 மணி வரை

பிரதம விருந்தினராக திரு. சிவதாசன் (பிரதம திட்டமிடல் பணிப்பாளர், யாழ்ப்பாணம்) கலந்து கொள்வார்.

(6973)


# பசுக்களுக்குக் காப்புறுதி பயனுள்ள திட்டம்

## மிருகவைத்திய அதிகாரி ஆலோசனை

பருத்தித்துறை அக் 11

பசுக்களை (கால்நடை) வளர்ப்போர் அவற்றுக்கு காப்புறுதி செய்வது பயனுள்ளது. பசுவின் பெறுமதியின் 4 வீதத்தை வருடா வருடம் காப்புறுதிப் பணமாகச் செலுத்தினல் பசு மாடு திடீரென இறந்தால் பெறுமதியின் 90 வீதம் நஷ்டஈடாகக் கிடைக்கும். இப்படி பருத்தித்துறை மிருக வைத்திய அதிகாரி கலாநிதி மு. தங்கராசா குறிப்பிட்டார்.

புலோலி மேற்கு சதாவதானி விவசாய கால்நடை வளர்ப்புச் சங்க அங்குரார்ப்பண கூட்டம் அண்மையில் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் திரு க. தங்கராசா தலைமையில் நடைபெற்றது.

அங்கு பேசுகையில் மிருகவைத்திய அதிகாரி திரு. மு. தங்கராசா மேலும் தெரிவித்ததாவது:-

"கால்நடைகளுக்கு நோய் ஏற்படுவதற்கு முனபே தடுப்பூசி போடுவது நலம். கோழி போன்றவற்றிகும் ஏனைய கால்நடைகளுக்கும் நோய் வந்த பின்பு தடுப்பூசி போடுவதனல் பயன் இல்லை.

வளர்ந்து வரும் கிராமங்களில் கோழி வளர்ப்பு ஏனைய கால்நடை வளர்ப்பு போன்ற முயற்சிகளில் இளைஞர்கள் அக்கறை காட்ட வேண்டும்- என்றார்.

# 1964 குடியுரிமைச் சட்டம்

# அரசினல் திருத்தப்படும்

கொழும்பு, அக். 11

1964 குடியுரிமைச் சட்டத்திற்குக திருத்தம் ஒன்றைக்கொண்டுவர அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இத்திருத்தத்தின் மூலம் நாடற்றவர்கள் என்று கருதபபடும் சுமார் இரண்டரை லட்சம் இந்திய வம்சாவழியினருக்குக் குடியுரிமை வழங்கப்படும் என்று அறிவிககப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் விரைவில் இத்திருத்தம் சமர்ப்பிககபபடவுள்ளது.

1-1-1964க்கு முன்னர் பிறந்த அனைத்து நாடற்றவர்களுக்கும் தானக இலங்கைப் பிரசைகளாக இத்திருத்தம் வழிவகுக்கும்.

இச்சட்டத்திருத்தத்துடன் நாட்டில் நாடற்ற பிரசைகளே இருக்க மாட்டார்கள்.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்துக்கு முன்னர் 4 லட்சத்து 64 ஆயிரம் நாடற்றவர்கள் இருந்தனர். அவர்களில் 2லட்சம் பேருக்குப் பிரஜா உரிமை வழங்கப்பட்டது.

1987இல் கொண்டு வரப்பட்ட சட்டத்தின் மூலம் 94 ஆயிரம் பேருக்கு பிரசாஉரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனல் இதுவரை 20 ஆயிரம்பேரே குடியுரிமை பெற்றனர்.

புதிய திருத்தத்தின்படி இந்த 94 ஆயிரம் பேரும் குடியுரிமை பெறுவர்.

இதனிடையில் இந்திய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானோருக்கும் இலங்கைப் பிரசாஉரிமை வழங்கவேண்டும்என்று இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. (இ-எ)

## தளபாடங்கள் ரெட்பாஞ வழங்கும்

மானிப்பாய் அக் 11

யாழ். பாடசாலைகளுக்குத் தேவையான மேலும் ஒருபகுதி தளபாடங்களை ரெட்பாஞ இயக்கம் வழங்கமுன்வந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் அண்மைக்கால அசம்பாவிதங்கள் காரணமாக கடும் தளபாடத் தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தின் சிபார்சுக்கமைய பாலர் வகுப்புக்களுக்குத் தேவையான 500 மேசைகளையும் ஆயிரம் பாலர் கதிரைகளையும் இந்த நிறுவனம் ஏற்கனவே வழங்கியுள்ளது குறிப்பிடத் தக்கது. (உ-90)

## வடமராட்சி பாடசாலைகளின்

# சேதம் குறித்து அறிக்கை தயாரிக்க மூவர் குழு

பருத்தித்துறை அக்-11

கடந்த மூன்று வருட காலப்பகுதியில் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் ஏற்பட்ட சேதங்கள், இழப்புகள் ஆகியவை குறித்தும் அவற்றின் பெறுமதி குறித்தும் விசாரணை செய்து அறிக்கை திரட்ட மூவர் கொண்ட குழு ஒன்று வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகத்தினல் நியமிக்கப்பட்டுளளது.

வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி செல்வி. தி பெரியதம்பியின் சிபார்சின் பேரில் வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு எம் சண்முகநாதன் தலைமையில் கோட்டக் கல்வி அலுவலக நிர்வாக உதவியாளர் திரு.கே. சரவணமுத்து, நிதி உதவியாளர் திரு. ஆர்.கணபதிப்பிள்ளை ஆகியோர் இக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழு விசாரணை அறிக்கையைத் திரட்ட வடமராட்சிப் பிரதேச பாடசாலை அதிபர்கள போதிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி செல்வி. தி.பெரியதம்பி கேட்டுள்டுள்ளார். (உ-118)

## கம்பிகள் திருட்டு

வட்டக்கச்சி, அக் 11

கிளிநொச்சிக்கும் இராமநாதபுரத்துக்கும் இடையே உள்ள தொலைபேசிக்கம்பங்கள் உடைக்கப்பட்டு அவைகளுக்குள் இருக்கும் இரும்புக் கம்பிகள் திருடப்பட்டு வருகின்றன. (ச-ரி)

## மாடுகளுக்கு தடுப்பூசி

வேலணை - அக் 11

தீவுப்பகுதியிலுள்ள மாடுகளுக்கு வேலணை அரசாங்க மிருகவைத்தியரின் மேற்பார்வையில் கோமாரி நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது. (உ-167)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

### Supply of Steel / Wooden Furniture

Sealed tenders are invited for the supply of the following furniture :

**Steel**

| | | |
|---|---|---|
| 1. | Cabinets | - 40 Nos. |
| 2. | Filing cabinets | - 20 Nos. |
| 3. | Cushioned arm chairs | - 50 Nos. |
| 4. | Cushioned armless chairs | - 25 Nos. |

**Wooden**

| | | |
|---|---|---|
| 1. | Lecture Hall Chairs | - 275 Nos. |
| 2. | Conference table chairs | - 50 Nos. |
| 3. | Conference table | - 01 Nos. |

Tender forms, drawings and the relevant details could be obtained from Bursar, University of Jaffna, from 17th October to 20th October 1988, until 3 p. m., on payment of a money order for Rs. 200/- being the non-refundable tender fee. The sealed tenders should be forwarded to reach Bursar, on or before 12 noon on 2nd of November 1988, indicating UJ/SK/T-1/2/11/88 on the top left handcorner. The above tenders will be appeared at 2 p. m. on 2nd of November 1988.

**Registrar.**

University of Jaffna,
Thirunelvely. (C-558)

## வேலை வாய்ப்பு லிபியா

(1) எலக்றிசன் - Electricians சம்பளம் 9 - 11,000வரை
(2) கொம்பியூற்றர் ஒபரேற்றர் Computer Operators - 12,000/-
(3) குவான்றிற்றி சேவையர் Quantity Surveyors - 14,000/-
(4) உதவி குவான்றிற்றி சேவையர் - 12,000/-

தொடர்பு கொள்ள வேண்டிய முகவர்:-

**கொழும்பில்**

18 1/4, முதலிகே மாவத்தை.
போட்.

**யாழ்ப்பாணம்**

ந. பாஸ்கரன், J. P
இந்திராணி ஏஜென்சி
நெல்லியடி, கரவெட்டி.
உடன் தொடர்பு கொள்ளவும்.
(7155)

## காணி உடன் விற்பனைக்கு

சுன்னுகம் சந்திக்கும் மல்லாகம் சந்திக்கும் இடையில் K. K. S வீதியில் மெயின் றோட் முகப்பைக் கொண்ட சதுரமான காணி 3 பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**எக்ஸ்போ பேணிச்சர் பலஸ்**
**சிவன் கோயில் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**
(7171)

## வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி

# B.A., B.Com.

## பாட நெறிகள்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தோரும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

**விரிவுரைகள் ஆரம்பம்: 16-10-1988**

ஞாயிறு காலை 8.00

**குறிப்பு:** ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கு தபால மூலம் விபரங்கள் அனுப்பப்பட்டுள்ளன 16-10-88இல் ஆரம்பமாகும் விரிவுரைகளுக்கு தவருது சமுகமளிக்கவும்.

**BECON**
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C 385)


# தமிழ்க்கிராமங்களுக்கு சிங்களப் பெயர்கள்

சல்குடா, அக். 11

கல்குடாத்தொகுதியில் உள்ள பழந்தமிழ்க் கிராமங்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டு வேறு மாவட்டமொன்றுடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிய வருகிறது.

கள்ளிச்சை, அம்புமுனை வடமுனை, ஊத்துச்சேனை, புலிபாய்ந்தகல், மீராணடவில் ஆகிய பகுதிகளில் நீண்டகாலமாக வாழ்ந்து வந்த தமிழ்க்குடிமக்களை வெளியேற்றி புதியவர்களைக் குடியமர்த்தும் வேலைகளும் ஆரம்பித்துள்ளதாக அறிய வருகிறது. (உ- ச)

## மக்கள் முகம்


### உதவி ஆணையாளர்

கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக யாழ். உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு எஸ் ரீ மார்க்கண்டு நியமிக்கப்பட்டுள்ளார்

1966 ஆம் ஆண்டு சமநல சேவைத் திணைக்களத்தில் பெரும்பாக உத்தியோகத்தராக நியமனம் பெற்ற இவர் குச்சவெளி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தராகவும், இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தணுக்காய், மட்டக்களப்பு, பளை ஆகிய இடங்களில் காரியாதிகாரியாக (D R O) கடமையாற்றினர். பின்னர் பருத்தித்துறை, மட்டக்களப்பு, வெள்ளாவெளி, பளை ஆகிய இடங்களில் உதவி அரசாங்க அதிபராகவும் மீன்பிடி அமைச்சின் உதவிப் பணிப்பாளராகவும்; வவுனியா, முல்லைத்தீவு கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளராகவும் பணியாற்றியுள்ளார். (உ-118)


## முதலாம் வருட நினைவஞ்சலி

(கைலாசபிள்ளையார் கோவில் வீதியில் 11-10-87-இல் ஷெல் தாக்குதலில் கைலாசம் சேர்ந்தவர்கள்)





**செல்வன் தி. கதிர்காமதாஸ்**
(போதஞசிரியர், யாழ். தாதிகள் பயிற்சிக் கல்லூரி)
(தமையஞர்)

அன்னை மடியில்: 26 08-1955
ஆண்டவன் அடியில்: 11 10-1987

**திரு. ப. யோகானந்தன்**
(எழுதுவினைஞர், மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்)
**திருமதி யோ. பவானி**
(தங்கையும் மைத்துனரும்)

அன்னை மடியில்: 01-03-1951 — 28.05.1958
ஆண்டவன் அடியில்: 11 10-1987 — 12-10-1987

வரலாறு படைத்த எங்கள் வற்ருத ஜீவநதிகளே வஞ்சகர் ஷெல் அடியால் மாண்டு மடிந்தீர்களே... ஆருத்துயரமும் மாருக்கண்ணீரும், நூருண்டு சென்ருலும் மாருது எம் துயரம்.


பால்மணம் மாருத உங்கள் பாலர்கள் ரமணனும். ரதிபனும், அம்மா, அப்பா, அண்ணன் மாமா எல்லோரும் கோயிலுக்குப் போய்விட்டார்கள். எப்போது வருவார்கள் என்று ஏங்கித் தவிக்கின்ருர்கள். என் செய்வோம்? விதியை வெல்ல இயலுமோ!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ரேம்.

பெற்ரேர், சகோதரர், பிள்ளைகள், மாமன், மாமி, மைத்துனர், மைத்துனிமார்.

11ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி



**பொன், ஸ்ரீ பாலசிங்கம்**

தோற்றம்:- 26- 06- 1962
மறைவு:- 28- 8 1988

வீட்டுக்கிரியைகள் புரட்டாதி மாதம் 25 ஆம் திகதி (11- 10 - 88) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதரராய் வருகை தந்து பிரார்த்தனை, மதிய போசனம் இவற்றில் கலந்து அன்னரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு வேண்டுகின்ரேம்.

**திரு திருமதி. பொன்னையா**

மாகியம்பதி,
சண்டிலிப்பாய். (7159)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர்.

**பொருள்:**

தாம் உரைத்த சூள் தவறுதபடி போர் செய்து சாகவல்லவரை, அவர் செய்த பிழைக்காகத் தண்டிக்க வல்லவர் யார்?


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/3 நாவலர் வீதி தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 23073
11-10-1988


## மீண்டும் வாராதே!

தமிழ் நாட்டில் சிறை வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு கிட்டுவும், ஏனைய 156 பேரும் விடுவிக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கும், திருகோணமலைக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக இந்தியத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கிட்டு, சென்னை மத்திய சிறையில் இருந்து இந்தியப் பிரதமர் திரு: ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தில்—

தம்மையும் ஏனைய விடுதலைப் புலிகளையும் கைது செய்தது தவறு என்றும்—

தம்மீது குற்றம் இருந்தால் வழக்குத் தாக்கல் செய்யுமாறும்—

இல்லையேல் தம்மை விடுதலை செய்து தமிழீழத்தில் தமது அணிப் போராளிகளிடம் ஒப்படைக்குமாறும்— கேட்டிருந்தார்:

அப்படி இரண்டில் ஒன்றை, நேற்றுப் பத்தாம் திகதி காலை ஒன்பது மணிக்கு முன் நிறைவேற்றுவிடில் தாம் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் திரு கிட்டு இந்தியப் பிரதமருக்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்தார்.

திரு. கிட்டு விதித்த கால அவகாசத்துக்கு ஒரு நாளுக்கு முன்னரே அவரும், ஏனைய 156 போராளிகளும் தமிழ் நாட்டுச் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

திரு. கிட்டுவும் ஏனைய விடுதலைப் புலிகளும், இந்திய தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டது சரியா. தவறு என்று விசாரிப்பதற்கு மூன்று நீதிபதிகள் கொண்ட சதாசிவம் கமிஷன் நியமிக்கப்பட்டு விசாரணையும் நடந்து வந்தது.

கமிஷன் விசாரணை முடிவடைவதற்கு முன்னரே கைதான விடுதலைப் புலிகள் விடுவிக்கப்பட்டதால், திரு. கிட்டுவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டே இந்திய அரசு அவர்களை விடுவித்தது என்று கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால் அவர்களை யாரிடம் இந்திய அரசு ஒப்படைக்கப் போகிறது என்பது தான் இப்போது எழுந்து நிற்கும் கேள்வியாகும்.

157 தமிழ்ப் போராளிகளும் யாழ்ப்பாணத்துக்கும். திருகோணமலைக்கும் அனுப்பப்பட்டதாக மட்டுமே தகவல் அவர்கள் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது குறித்து இப்பத்தி எழுதப்படும் வரை தெளிவான, துலக்கமான தகவல்கள் வெளியிடப்படவில்லை.

தமிழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட ஈழத் தமிழ்ப் போராளிகளை, இலங்கை அரசிடம் இந்தியா கையளிக்குமோ என்ற ஒரு சந்தேகநிலையும் உண்டு.

அந்தச் சந்தேகத்தை இந்திய அரசு உண்மையாக்கி விட மாட்டாது என்றே நம்புகிறோம்.

கடந்த வருடம் அக்டோபர் மாசம் முதல் வாரத்தில் பலாலியில் இருந்த தமிழ்ப் போராளிகளைக் கொழும்புக்குக் கொண்டு வர வேண்டும் என்று விடாப்பிடியாக நின்ற அமைச்சர் லலித்தின் அடம்பிடித்தலுக்கு இந்தியா பணிந்து போகும்நிலை தோன்றியதால் 12 தமிழ் போராளிகள் மரணமடைந்ததும்—

அதனைத் தொடர்ந்து அக்டோபர்- 10 அனர்த்தநிலை, அநியாய நிலை உருவாகியதையும் ஈழத்தமிழ் மக்கள் இன்னும் மறந்து விடவில்லை.

ஈழத்தமிழர் வரலாற்றில் மறக்க முடியாத இருண்டகாலம் அது. தமிழ்ப் பகுதிகளில இரத்த ஆறு ஓடியது; முன்னர் எப்போதும் இல்லாதவாறு மக்கள் எண்ணுக்கணக்கில்லாது உயிரிழந்தனர் மீண்டும் புனரமைக்க முடியாதவாறு உடைமைச் சேதங்கள் ஏற்பட்டன. மக்கள் உணர்வு அடங்கி, அகதி முகாம்களில் முடங்கிக் கிடந்து, அனுபவிக்காத அவலங்களை எல்லாம் அனுபவித்தார்கள்.

அக்டோபர் பத்தைத் தொடர்ந்து இரண்டு மூன்று மாதங்கள் ஈழத் தமிழர் அடிப்படை வசதிகளைப் பெறவோ, உரிமைகளை அனுபவிக்கவோ முடியாமல் மரணத் தறுவாயில அவஸ்தைப்பட்டார்கள்

ஆகையால், இகுவில் மறக்க முடியாத, இன்னல் தந்த அந்த இருண்ட அக்டோபர் பத்து மீண்டும் வரக்கூடாது என்பதே ஈழத் தமிழ் மக்களின் விருப்பமாகும் மீண்டும் வாராதே 1987 அக்டோபர் பத்தே என்பதை தமிழ் மக்கள் இதயம் நிமிடத்துக்கு நிமிடம் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அது போலவே—

தமிழகச் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளை வஞ்சம் தீர்க்க வேண்டும் என்று எண்ணுமல், ஓர் சுமுகமான நிலையை இந்திய அரசு உருவாக்க வேண்டும் என்பதும் தமிழ் மக்களது விருப்ப மாகும்.

### ஜனாதிபதி நிராகரிப்பு

சந்தியாகோ, அக் 10

சிலிநாட்டு ஜனாதிபதி பதவியில் இருந்து ராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ஜெனரல் பினசே நிராகரித்து விட்டார்.

1990 மார்ச் வரை ஜனாதிபதியாக பதவி வகிக்க அரசமைப்புச்சட்டம் இடமளிக்கின்றது என்று கூறிய ஜெனரல் பினசே, சர்வசன வாக்கெடுப்பில் எதிர்க்கட்சிக்குக் கிடைத்தவெற்றியைத்தான் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார். (எ)

### அதிகாரிகள் கைது!

லுஸாகா அக் 11

அரசாங்கத்தை கவிழ்க்க சதிசெய்ததாக ஆறு இராணுவ அதிகாரிகளையும் மூன்று சிவிலியன்களையும் ஸம்பிய அரசு கைது செய்து தடுப்புக் காவலில் வைத்தது

சதி முயற்சி விசாரணையில் இவர்கள் அரசுக்கு உதவி செய்வதாக பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் அலெக்ஸ் ஷாப்பி தெரிவித்தார். (எ)

### அல்ஜீரியாவில் சகஜ நிலைமை

அல்ஜியர்ஸ், அக் 10

அல்ஜீரியாவில் மீண்டும் சகஜ நிலைமை திரும்புவதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு தினங்களாக அல்ஜியர்ஸ் நகரிலும் வேறு நகரங்களிலும் அரச எதிர்ப்புக்கிளர்ச்சி இடம் பெற்று வந்தது.

இவ் வன்செயல்களில் 200 பேர் வரை உயிரிழந்தனர் என்று அறிவிக்கப் பட்டது.

விலைவாசி உயர்வைக் கண்டித்து மக்கள் இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

வன்செயல்கள் குறைந்து விட்டது என்றும் ஊழியர்கள் அரச அலுவலகங்களுக்குத் திரும்பி விட்டனர் என்றும் அரசு நேற்று அறிவித்தது. (எ)

# தமிழகத்தில் காங்கிரஸ்-முஸ்லிம் லீக் தேர்தல் கூட்டணி அமைக்கப்படும்!

சென்னை, அக். 10

இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் தமிழ்நாடு பிரிவு, இந்திரா காங்கிரஸுடன் இணைந்து தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

தமிழ்நாடு பிரிவுத் தலைவர் அப்துல் ஸமது இது குறித்து இந்திரா காங்கிரஸ் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தி வருகின்றார் என்று கூறப்படுகிறது.

தி மு க வுடன் முன்னர் முஸ்லிம் லீக்தேர்தல் கூட்டணி அமைத்து இருந்தது.

தி மு க ஏழு எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து தேசிய முன்னணி ஒன்றை அமைத்ததை ஆட்சேபித்து முஸ்லிம் லீகுக்கும் தி மு. கவுக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது தெரிந்ததே. (எ)

### அரச ஊழியர் கைது

பர்மா, அக்10

பர்மாவில் அரசு எதிர்ப்பு ஊழியர்களைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இன்னும் அரசு அலுவலகங்களில் அன்றாட சடமைகள் இன்னும் சகஜ நிலைமைக்கு வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது (எ)

### நிராகரிப்பு

பேருட் அக் 10

லெபனான் ஜனாதிபதி தேர்தலை ஐக்கிய நாடுகள் சபை மேற்பார்வையிட வேண்டும் என்ற பிரஞ்சு அரசாங்கத்தின் யோசனையை முஸ்லிம் பிரிவுகள் அனைத்தும் நிராகரித்து விட்டன. (எ)

வெளி உலகில்

## "நாம் கொடுக்கும் தோல்வியே, கருணாநிதிக்கு கடைசித்தோல்வி"

### ஜெயலலிதா பேச்சு

மதுரை, அக் 10

‘வரப்போகும் தேர்தலில் நாம் கொடுக்கும் தோல்விதான் கருணாநிதிக்கு கடைசித் தோல்வி, என்று ஜெயலலிதா கூறினார்

மதுரை நகர புறநகர மற்றும் அண்ணா மவட்ட அ.தி மு. (ஜெயலலிதா அணி) செயல் வீரர்கள் கூட்டம் மதுரை தமுக்கம் கலை அரங்கில் நடந்தது

கூட்டத்தில் அ தி மு க. [ஜெ] பொதுச் செயலாளர் ஜெயலலிதா [எம். பி] கலந்து கொண்டு பேசியதாவது:-

**பதவி வெறி**

புரட்சித் தலைவர் என்றும் அமைச்சர்களை, பதவி வெறியர்களை நம்பவில்லை. இரத்தத்தின் இரத்தமான தொண்டர்களாகிய உங்களைத்தான் நம்பினார். அந்த புரட்சித் தலைவருக்கு சோதனை-வேதனை ஏற்பட்ட நேரங்களில் எல்லாம் நீங்கள் அவருக்கு உறுதுணையாக இருந்து வாகை சூடச் செய்தீர்கள்.

**கடைசித் தோல்வி**

நாவலர் சுருதி பேதத்துடன் எதை எதையோ பேசுகிறார். நேற்றுவரை நம்மோடு இருந்த அவர் இன்று சிலருடன் சேர்ந்து கொண்டு இப்படிப் பேசுகிறார் தன் பின்னணி என்ன? என்பதை நேரம் வரும்போது உங்களுக்குச் சொல்வேன்.

அவருடைய அணி கருணாநிதியை வீழ்த்துவதையே நோக்கமாகப் பேசி வருகிறது. கருணாநிதியை எதிர்ப்பதற்கு நாவலர் தகுதியானவரா? அவரால் கருணாநிதியை வீழ்த்த முடியுமா? அவரை வீழ்த்த இந்த ஜெயலலிதா புரட்சித் தலைவர் அவர்களிடம் சத்தியம் செய்து கொடுத்து இருக்கிறேன். தேர்தல் வரட்டும். நான் கருணாநிதிக்கு கொடுக்கப் போகும் தோல்விதான் அவருக்குக் கடைசித் தோல்வி என்பதை உங்களிடத்திலேயே கூறிக் கொள்கிறேன்.

வெற்றிக் கனியை ஈட்டி புரட்சித் தலைவரின் சமாதியில் சமர்ப்பிப்போம்

**சாணக்கியன்**

"மணந்தால் மகாதேவி இல்லையேல் மரண தேவி" என்று கூறுவதைப்போல நாவலர் கூட்டணி பற்றி பேசிப் பேசி இ காங்கிரசுக்கும் அ. தி. மு. க. விற்கும் உள்ள உறவை கெடுத்தார் இன்று எத்தனை இடமானாலும் பரவாயில்லை, தி. மு. கவை வீழ்த்தினால் போதும் என்று கூறி வருகிறார்.

பண்ருட்டி அரசியல் சாணக்கியன் என்றாலும் அவர் சூழ்ச்சிக்கு கழகத்தைப் பலியாக விடமாட்டேன். இறுதி மூச்சு உள்ளவரை கழகத்தைக் காப்பேன் என்று சொல்லிக் கொள்கிறேன.

**புரட்சித் தலைவர் ஆட்சி**

தமிழகத்தில் மீண்டும் புரட்சித் தலைவர் ஆட்சி அமைவது உறுதி இது காலத்தின் கட்டளை. எந்தச் சக்தியாலும் இதைத் தடுத்து நிறுத்த முடியாது.’

இவ்வாறு ஜெயலலிதா கூறினார். [எ-4]

## காங்கிரஸ் போட்டியிடாமல் ஒதுங்க மூப்பனாரின் இரண்டு நிபந்தனைகள்

சென்னை, அக் 10

‘இலங்கையில் தனி ஈழம் கேட்பதை ஆதரிக்கும் தி. மு. க வினர் இங்கே திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட்டது ஏன?’ என்று கருணாநிதிக்கு தமிழ்நாடு காங் தலைவர் ஜி. கே. மூப்பனார் கேள்வி எழுப்பி இருக்கிறார்

சென்னையிலுள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் மூப்பனார் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

கேள்வி: தேர்தலில் தி மு க. போட்டியிடாமல் இருக்க கருணாநிதி நிபந்தனைகளை விதித்து இருக்கிறாரே?

பதில் தேசியத் தலைவராக ராஜீவ் காந்தியை ஏற்றுக்கொண்டு தமிழகத்தில் காமராஜர் ஆட்சி அமைய கருணாநிதி ஒப்புக்கொண்டால் நங்கள் (காங்கிரசார்) தேர்தலில் போட்டியிட வேண்டிய தேவை இருக்காது. இதைக் கருணாநிதி ஒப்புக்கொள்வாரா?

தனி ஈழம் அமைப்பது பற்றியும் ஒரு நிபந்தனை போட்டிருக்கிறார் இலங்கையில் தனி ஈழம் கேட்பவர்களை ஆதரிக்கும் தி மு க. இங்கே திராவிட நாடு கோரிக்கையை ஏன் கைவிட வேண்டும்? கருணாநிதி பேசுவது சாத்தான் வேதம் ஓதுவது போல் இருக்கிறது. (எ- 4)

### மலேசியாவில் மதசுதந்திரம்

கோலாலம்பூர், அக். 10

மலேசியாவில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியதற்காக குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்த மலேசியனர் ஒருவரை விடுதலை செய்யும்படி மலேசிய நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்திருக்கிறது.

மலேசியாவில் மத சுதந்திரத்தை அங்கீகரிக்கும் முதல் தீர்ப்பாக அவதானிகள் இதனைக் கருதுகின்றனர்.

இக்க இளைஞருடன் சேர்த்து மேலும் 120 பேர் இதே குற்றச்சாட்டின் கீழ் கடந்த அக்டோபரில் கைது செய்யப்பட்டிருந்தனர் (உ)

### அமெரிக்காவில் தொழில் வாய்ப்பு

வாஷிங்டன் அக் 10

அமெரிக்காவில் வேலையில்லாத்திண்டாட்டம் குறைந்து வருவதாக அறிவிக்கப்பட்டது

சென்ற மாதத்தில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை 5 4 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்து விட்டதாக அரசு அறிவித்தது (எ)

### பலஸ்தீனியர் கிளர்ச்சி

ஜெருசலம். அக் 10

பலஸ்தீனியக் கிளர்ச்சியில் மேலும் மூன்று பலஸ்தீனியர் கொல்லப் பட்டனர்.

கடந்த டிசம்பரில் இஸ்ரவேலியர்களினால் கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களை மீட்கும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே

போராட்டத்தின் ஒரு கட்டமாக பொதுவேலை நிறுத்தம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது

அப்போதே இஸ்ரவேலிய ராணுவம் சுட்டு இம்மூன்று பலஸ்தீனியரும் உயிரிழந்தனர் [ ]

## அறிவுக்கே முதன்மை வேண்டும்

இந்த வையத்து வாழ்க்கை சிறப்புற நடைபெறுவதற்கு அன்னை பராசக்தியை வணங்கும் வழிபாட்டு முறை பல வகையாக வகுக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் ஒன்பது இரவுகள் தேவியின் இராத்திரிகளாகப் பகுத்த முறை தலையாயது சிவசக்திக்கு இராத்திரி என்றும் ஒரு பெயர் உண்டு

பராசக்தி மானிடரின் தேவைக்காகக் கல்வியை செல்வத்தை வீரத்தை வழங்கி அருள்செய்கின்றாள்,

இவளுடைய வரத்தை வேண்டி நிற்கும் மக்கள் முதல் வரமாகப் பயன் வழங்கலாகப் பெற்றுக் கொள்ள வேண்டியது கல்வி வரமாகும்.

கல்விச் செல்வமே பிற செல்வங்களைத் தேடுவதற்கும் பேணுவதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவக்கூடிய செல்வமாகும்

பராசக்தி லக்ஷ்மியாய் துர்க்கையாய் நின்று வழங்கும் பெருளும் வீரமும் தக்கவாறு வகுக்கவும் செலுத்தவும் கல்விச் செல்வமே வழிகாட்டக்கூடியது

திருவள்ளுவரும் மனித குலத்திற்கு இன்றியமையாத செல்வமாகிய கல்வியை வற்புறுத்தி நாற்பது குறள்களைத் தந்துள்ளார்.

கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்னும் நான்கு அதிகாரங்களும் வள்ளுவர் உடைய கல்விச் சிந்தனைகளாகும்.

அறிவே ஆக்கம், ஆற்றல்களுக்கு முதன்மையாய் இருப்பதால் கல்வித் தெய்வமாகிய சாஸ்வதியின் வழிபாடே ஒன்பது நாள் வழிபாட்



டில் முதன்மை பெற்றிருக்க வேண்டும்.

முதல் மூன்று நாளும் சரஸ்வதிக்குரிய நாளாக நடைமுறை பெற்றிருக்க வேண்டும்

முதல் மூன்று நாட்களையும் துர்க்கை வழி

> அறிவே ஆக்கம் ஆற்றல்களுக்கு முதன்மையாக இருப்பதால் கல்வித் தெய்வமாகிய சரஸ்வதியின் வழிபாடே ஒன்பது நாள் வழிபாட்டில் முதன்மை பெற்றிருத்தல் வேண்டும் என்கிறார்
>
> **புலவர் ஈழத்துச் சிவானந்தன்**

பாட்டிற்குரிய இலங்களாக் கொண்டாடிய நாள் ... இந்த வழிபாடு ... லாற்றை நோக்கி அறிந்து கொள்வது நல்லது.

இல்வாழ்வு, சமூக வாழ்வு அரசியல்வாழ்வு எங்கும் போர்க்குணம் போராட்டம் சேனமயமாகிவிட்டன

எங்கும் இராணுவ சுத்துவமே வடிவம் கொள்ள முனைகிறது

அறிவுத் தெளிவு இல்லாததால் அறிவுநிலை முடிவுகளைவிட உணர்வுநிலை முடிவுகளே மேலெழுகின்றன.

முதல் மூன்று நாட்களையும் கல்வி நாயகிக்குரிய நாட்களாகவும் இடை மூன்று நாட்களையும் செல்வநாயகிக்குரிய நாட்களாகவும் கடை மூன்று நாட்களை வீரநாயகிக்குரிய நாட்களாகவும் கொண்டாடுவது குறித்து அறிஞர் உலகம் சிந்திக்க வேண்டும்

கல்வியா, செல்வமா வீரமா? என்னும் உலக வழக்கும் நோக்கத்தக்கது.

பத்தாவது நாளை வெற்றிக்குரிய பத்தாம் நாள் என்றும் ஆயுத பூசைக்குரிய நாள் என்றும் விஜயதசமி என்றும் கருதப்படுவதால் கடைசி மூன்று நாட்களும் துர்க்கைக்குரிய நாட்களாக இருப்பதற்கு தகுதி வாய்ந்ததாகிறது

இவை ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்டு அடுத்த ஆண்டில் இருந்து நடைமுறைக்கு வருவதற்கு சிவநெறி அறிஞர்கள் ஆவன செய்ய ... (ச)

## சமய சந்நிதிகளில்

### வட்டக்கச்சியில் சனீஸ்வர உற்சவம்

வட்டக்கச்சி அக் 11

வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப்பெருமாள் ஆலயத்தில புரட்டாதிச் சனி உற்சவம் 15ஆம் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்கு இடம் பெறும்

சனீஸ்வர பூஜையும் விசேஷ அபிஷேகமும் அன்று மாலை நான்கு மணிக்கு நடைபெறும். (சா)

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம் அக் 11

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான கலச சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7மணிக்கு ஆரம்பமாகி பகல் 11 மணிக்கு 108 கலச சங்காபிஷேகம் நடைபெறும் (ச)

உசன் கொத்தணி அமைப்பில்

## ஆறு பாடசாலைகளில் சாரணீயம் அங்குரார்ப்பணம்

சொடிகாமம், அக் 11

உசன் கொத்தணி அமைப்பிலடங்கும் ஆறு பாடசாலைகளில் சாரணீயம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி சாரணிய மாவட்ட ஆணையாளர் திரு கே கோபாலகிருஷ்ணன் இதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்

உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச வித்தியாலயம் எழுதுமட்டுவாள் அ த. க. பாடசாலை, மிருசுவில் வடக்கு அ த.க பாடசாலை: மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகிய ஆறு பாடசாலைகளிலேயே கொத்தணி அதிபர் திரு க. சிவபாதசுந்தரத்தின் மேற்பார்வையில் சாரணீயம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. (உ-75)

ஒரே முகவரியில் வதியும்

## ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்குப் நிவாரணம்

குருநகர், அக் 11

"ஒரே முகவரியில் வதியும் மேலதிகக் குடும்பங்களுக்கும் நிவாரணத் தொகை தனித்தனியாக வழங்கப்படும்"

இவ்வாறு குருநகர் பகுதிக் கிராம சேவையாளர் திரு. ரூமான் அன்ரனி தெரிவித்தார்.

ஒரே முகவரியில் இருக்கும் ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களை உள்ளடக்கி ஒரே தெரிவு அட்டை வழங்கப்பட்டு வருவதைத் தொடர்ந்து பொதுமக்கள் மத்தியில எழுந்துள்ள தவறான கருத்தை எமது குருநகர் செய்தியாளர் கிராம சேவையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது மேற்கண்டவாறு அவர் பதில் அளித்தார் (இ-51)

## எமக்குக்கண்டிப்பாக ஒரு தாயகம் வேண்டும்

### நினைவாலயத் திறப்புவிழாவில் உரை

யாழ்ப்பாணம், அக்11

‘எமக்கு கண்டிப்பாக ஒரு தாயகம் வண்டும். எம்மைத் தனித்து வாழ விட வேண்டுமெனச் சிங்கள மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடற்படை மேஜர் அப்துல் நினைவாலயத்தை கச்சாய் வீதி ஓரியாய் அம்மன் சந்தியில் திறந்து வைக்கையில் திரு. சிதம்பரநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

மேஜர் அப்துல்லாவின் தயார் அப்துல்லாவின் படத்துக்கு மாலை அணிய மாணவர் ஒழுங்கமைப்புக் குழு சார்பாக இரு மாணவிகள் நினைவுப்பாடல்கள் பாடினார்.

ஸ்ரான் போட் கல்வி நிறுவன மாணவர்கள் தமது நிறுவன பழைய மாணவனான மேஜர் அப்துல்லாவுக்கு கவிதாஞ்சலி செலுத்தினர் (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதித்துறையில்
நாணயம் மிக்க நண்பன்
ஷப்ரு
207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

11 - 10 - 1988 செவ்வாய்க்கிழமை

Your Friends in Finance
SHABRA
61, New Bullers Road, Co- 6.

# இனப்பிரச்சினை விவகாரத்தில் சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி

## இரு துருவங்களாக நிற்கின்றன!

கொழும்பு, அ;

எட்டுக் கட்சிக் கூட்டணியில் சேர்வதற்கு ஜே வி பியும் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும், சுதந்திரக் கட்சிக்கும், ஜே. வி. பிக்கும் இடையில் இனப் பிரச்சினை, பொருளாதாரக் கொள்கை ஆகிய இரண்டிலும் கருத்து வேறுபாடு நிலவுவதாக அறிய வருகிறது.

இரு பகுதியினரும் மேற்சொன்ன இரு முக்கிய விடயங்களிலும் இரு துருவங்களாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

எட்டுக்கட்சி கூட்டணி இன்னமும் ஒரு பொது வேலைத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்குரிய தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று அறியப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜனதா விமுக்தி பெரமுனவுக்கும் (ஜே. வி. பிக்கும்) அங்கம் வகிக்கும் மற்றைய கட்சிகளுக்கும் இடையில் பொது வேலைத் திட்டம் சம்பந்தமாகத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இந்த பேச்சுவார்த்தைகள் வெற்றிடளிப்பதில் தான் எட்டுக்கட்சி கூட்டணியின் எதிர்காலம் தங்கியுள்ளது என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் இன்னும் ஓரிருவாரங்களில் தெரிய வரும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (அ-3)

# முல்லைத்தீவில் பெண் உட்பட 4 பேர் கொலையுண்டனர்

முல்லைத்தீவு அக் 11

முல்லைத்தீவு - அலம்பில் வீதிப் பகுதியில் நடைபெற்ற சம்பவம் ஒன்றில் நான்கு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் பெண்.

நால்வரினது சடலங்களும் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு அங்கு மரண விசாரணை இடம்பெற்றது.

மரண விசாரணையை மேற்கொணட முல்லைத்தீவு பதில் நீதிபதி திருமதி ம. சதாசிவம் அவை கொலைகள் எனத் தீர்ப்பளித்தார்.

அலம்பில் வீதியில் அமைதிப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலைத் தொடர்ந்தே மேற்படி கொலைச் சம்பவங்கள் இம்மாதம் ஐந்தாம் திகதி நடைபெற்றதாகச்சொல்லப்பட்டது.

வீடுகளில் இருந்தவர்களைச் சீருடை அணிந்தவர்கள் வெளியே இழுத்து வந்து சுட்டதாகச் சொல்லப்படுகிறது. (அ-க-92)

## யாழ்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

கள் நடமாட்டமும் மிகக் குறைவாகக் காணப்பட்டது.

மாலை யாழ்நகரில் இரண்டு தடவைகள் குண்டுகள் வெடித்த சத்தங்களும் கேட்டன.

இதேவேளை கொழும்பிலருந்து புறப்பட்டபஸ்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன. (க-10)

தாதிகள் பயிற்சிக்கு

# தெரிவானோருக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், அக் 11

தாதியர் பயிற்சி நெறிக்கு தெரிவானோருக்கான மற்றுமொரு நேர்முகப் பரீட்சை 25 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

இந்த நேர்முகப் பரீட்சையில் தாதியர் பரீட்சைக்குக் கேட்கப்பட்ட கல்வித் தகமைகள் பிறப்புச் சான்றிதழ், மற்றும் நற்சான்றிதழ்கள் சுகாதார அத்தியட்சகரால் பரிசீலிக்கப்படும்.

இவர்களுக்கு 16 ஆம் திகதி கொழும்பிலும் ஒரு நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவது மிகவும் அவசியமாகும். எனவே தெரிவு செய்யப்பட்ட அனைவரும் 16 ஆம் திகதி பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ். சுகாதாரத் திணைக்கள அத்தியட்சகர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ 10)

## பஸ்கள் திருப்பப்பட்டன

பருத்தித்துறை, அக் 9

நேற்று முன்தினம் பருத்தித்துறைப் பகுதியிலிருந்து புறப்பட்ட வடபிராந்திய பஸ்களும், தனியார்மினி பஸ்களும் நெல்லியடி, நவிண்டில், பொலிகண்டி, வல்லிபுரம் பகுதிகளில் இந்திய அமைதிகாக்கும் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுப்பின்பு திருப்பி விடப்பட்டன.

இதனால் கொழும்பு இ. போ ச., தனியார் மினிபஸ்களும் பெரிதும் சிரமத்துக்குள்ளாயின. (க-118)

## கோவிலில் திருட்டு

யாழ்ப்பாணம், அக் 11

திருநெல்வேலித் தலங்காவற்பிள்ளையார்கோவிலில் திருட்டு நடைபெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு ஆலயத்துக்குள் நுழைந்த திருடர்கள் வெண்கலப் பாத்திரங்கள் உட்பட பெறுமதி மிக்க பொருள்களை அபகரித்துச் சென்றனர் [இ-10]

யாழ்-கிளிநொச்சி மாவட்டம்:

# தாதியர் பயிற்சிக்கு தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து தாதியர் பயிற்சி நெறிக்கு 185பேர் தெரிவாகியுள்ளனர். அவர்களில் 45 பேர்களின் பெயர் வருமாறு:-

**யாழ்ப்பாணமாவட்டம்**

எம் சுரேந்திரன் ஊர்காவற்றுறை எஸ், சுதாகரன் நெடுந்தீவு. எஸ் அருட்சக்தி அனலைதீவு அ அகில்டாரஞ்சனி ஊர்காவற்றுறை எஸ் சிறிதா மண்டைதீவு.

ஏ சுவாம்பிள்ளை யாழ்ப்பாணம் எஸ் சுகதாரேமியோ யாழ்ப்பாணம், க அற்புத ஜெயம் கொடிகாமம் ஏ சிவலிங்கம் புலோலி எஸ் தாராஜினி வல்வெட்டித்துறை எம் வியேமாலினி வல்வெட்டித்துறை வ சதீஸ்வரன் வவுனியா எம் ஜெயச்சந்திரன் கரவெட்டி எஸ் நற்குணம் அல்வாய்.

எஸ் சுரேஷ்குமார் கோப்பாய் த கோணேசலிங்கம் கோப்பாய் ம லீமதுமாரி மிருசுவில் எஸ் சிறிநகுலேஸ்வரன் கொடிகாமம் சி பாலகிருஷ்ணன் கொடிகாமம் ஆர் காமினி கொடிகாமம் வி உதயராணி கைதடி கே சிவகுமார் மிருசுவில் என் ரட்ணேஸ்வரி கைதடி கே சாந்தினி கைதடி.

வி நந்தினி யாழ்ப்பாணம் எஸ் சுந்தரமலர் யாழ்ப்பாணம் எஸ் சோல்விகா யாழ்ப்பாணம் எச் ஜெயந்தி யாழ்ப்பாணம் கே பூராணி யாழ்ப்பாணம் தி உதயகுமார் மட்டக்களப்பு எஸ் ஞானசோதி கோண்டாவில் எஸ் சுபராணி கோண்டாவில் எஸ் லோஜினி கோண்டாவில் கே ராதிகா யாழ்ப்பாணம்.

கே கமலநாயகி யாழ்ப்பாணம் கே சத்தியபாமா யாழ்ப்பாணம் கே ராஜேஸ்வரி யாழ்ப்பாணம் என் சுகுணதாசன் யாழ்ப்பாணம் எஸ் ஜெயரஞ்சன் யாழ்ப்பாணம் வி விஜயகாந்தன் விஜயா கொக்குவில் ரி சாரதா யாழ்ப்பாணம் என் பற்குணராசா யாழ்ப்பாணம் அ சுபேந்திரா பருத்தித்துறை பி தனபாலேஸ்வரி வவுனியா. (தொடரும்)

## தெற்கில் . . .

[1ம்-பக்கத் தொடர்ச்சி]

தனர். கொட்டகலயில் இராணுவம் சுட்டதில் ஒருவர் மரணமடைந்தார்.

களுத்துறையில் வீதிக் கிளர்ச்சி நடத்திய 2 ஆயிரம் ஆர்ப்பாட்டக்காரர்களைப் பொலீஸாரும் பாதுகாப்புப் படையினரும் விரட்டி அடித்தனர்.

**குண்டு வெடிப்பு**

ஹோமகமவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் 2 பேர் காயமடைந்தனர். மாகோ ரயில் நிலையத்தில் நேற்று மூன்று ரயில் பெட்டிகள் கொளுத்தப்பட்டன.

மாத்தறை மாவட்டத்தில் நடந்த வன்செயல்களைத்தொடர்ந்து பிரஸ்தாப மாவட்டத்தில் 48 மணிநேர ஊரடங்கு நேற்றுமுதல்அமுலுக்குக் கொண்டு வரப் பட்டது. புதன்கிழமை காலை ஊரடங்கு நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

டிக்வல என்னுமிடத்தில் பாதுகாப்புப் படையின்மீது தாக்குதல்நடத்தப்பட்டது.

இராணுவ அதிகாரிஒருவரின் உததரவின்மீதுசிப்பாய்கள் சுட்டனர். அப்போது வீதியில்நின்ற ஒரு பெண் உயிரிழந்தார்.

இன்னொருசம்பவத்தில் ரிவோல்வரை வைத்து இருந்த நபர் ஒருவரைப் பாதுகாப்புப்படையினர் சுட்டுக் கொன்றனர்.

தென்னிலங்கையில் பல நகரங்களிலும் கடைகள் மூடப்பட்டிருந்தன எனினும் சில கடைகள் படையினரின் மேற்பார்வையில திறக்கப்பட்டிருந்தன.

**கொழும்பில்**

கொழும்பில் நேற்று பெரும்பாலான அரச, தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன.

படையினரின் பாதுகாப்புடன் திறந்திருந்த சில அரச அலுவலகங்களுக்கும் ஒரு சில ஊழியர்களே கடமைக்கு வந்திருந்தனர். கடைகளும் மூடப்பட்டிருந்தன. படையினரின் பாதுகாப்புடன் சில கடைகள் மட்டும் திறக்கப்பட்டிருந்தன.

போக்குவரத்தில் ஈடுபட்ட ஒரு சில வாகனங்களுக்கும் படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

ஹர்த்தாலை மீறி ஓடிய சில வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் அறிய வந்துள்ளது.

இதேவேளை கொழும்பு நகரெங்கும் முப்படைகளும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாம். ஹெலிக்கொப்டர்களில் இருந்தும் அடிக்கடி சில இடங்கள் படையினரால் கண்காணிக்கப்பட்டதாகவும் அறியவந்தது. (அ-க-10)

## ஐ.தே.க. ...

(1ம்-பக்கத்தொடர்ச்சி)

நொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஈ. பி. ஆர். எல். எப், ஈ. என். டி. எல் எப், ஆகியவற்றைச் சேர்ந்த 36 உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இதுவரை யாழ் மாவட்டத்தில் மட்டுமே 19 ஆசனங்களுக்கு ஈ. பி. ஆர். எல். எப். இயக்க உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவாகினர் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஏனைய நான்கு மாவட்டங்களில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டவர்கள் பற்றிய விவரங்கள் இன்னும் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட வில்லை. (அ-எக)

## கிரனேட்.,.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வரே காயமடைந்தவர் ஆவார். யாழ் ஆஸ்பத்திரியில் இவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர் வைக்கோல் வாங்கிக்கொண்டு வீதியால் சென்ற சமயம் கல்வியன்காட்டுச் சந்தைக்கு அருகில் உள்ள அமைதிப்படை முகாம் அருகே குண்டு ஒன்று வெடித்ததாகச் சொல்லப்படுகிறது.

கிரனைட் வெடிப்பை அடுத்து கல்வியன்காட்டுப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. (இ-10)

## பணம் தந்த சிரமம்

யாழ்ப்பாணம், அக் 11

250 ரூபாவுக்கு மேற்பட்ட தொகை பணத்தை எடுத்துச் சென்ற பொதுமக்கள் வழியில் பெரும் சிரமப் படவேண்டியதாயிற்று.

நகரில் ஞாயிறு திங்கள் கிழமைகளில் காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி ஆகியவற்றில் இச்சம்பவம் நடைபெற்றது.

கிராமப் பகுதிகளிலும் மக்கள் இவ்வாறு சிரமப் படநேர்ந்ததாக பாதிக்கப்பட்ட மக்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

அமைதிப் படையினர் பொதுமக்களை கடந்த இரண்டு நாட்களும் வீதிகளில் சோதனையிட்டனர்.

அப்போது பொதுமக்களில் 250 ரூபாவோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகையோ வைத்திருந்தவர்கள் அவ்விடத்தில் தடுத்து வைக்கப்பட்டனர்.

சிலரை பணத்துடன் வீட்டுக்கு திரும்பிச் செல்லுமாறும் படையினர் பணித்துள்ளனர்.

தமக்கு ஏன் இந்தச் சிரமம் என்று பொது மக்கள் பெரும் ஆச்சரியம் அடைந்திருந்தனர். இதற்கான காரணம் அவர்களுக்கு தெரியப் படுத்தப்படவில்லையாம்! (அ-10)

## பதக்கம் அணிவிப்பு

கொழும்பு, அக் 11

'வடமராட்சிப் பதக்கு' அளிப்பு வைபவம் நேற்று நடைபெற்றது.

ஜனாதிபதி மாளிகையில் சம்பிரதாயபூர்வமாக நடைபெற்ற இந்த வைபவத்தில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன பதக்கங்களை அணிவித்தார்.

அமைச்சர் லலித், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு சேபால ஆட்டிகல, மூன்று டாக்டர்கள் உட்பட பல படை அதிகாரிகளுக்கு, ஜனாதிபதி பதக்கம் சூட்டிக் கௌரவித்தார். (அ-க)

## யாழ் மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர்

யாழ்ப்பாணம். அக் 11

யாழ் - மாவட்ட பொலீஸ் அத்தியட்சகராக திரு. சற்குணராசா கடந்த ஐந்தாம் திகதி முதல் பதவி ஏற்றுள்ளார்.

முன்னர் யாழ் மாவட்ட பொலீஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றிய திரு. பொ இராஜேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அவரின் இடத்துக்கு இவர் நியமிக்கப் பட்டுள்ளார். (இ-10)

## 12 போராளிகள் கொலையுண்டதாக அறிவிப்பு

புதுடில்லி, அக் 11

வவுனியாவுக்கு அருகில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் 12 பேரை இந்திய அமைதிப் படையினர் சுட்டுக்கொன்றனர் என்று புதுடில்லியில் அறிவிக்கப்பட்டது,

ஓமந்தைக்கு அருகில் இம்மோதல் இடம்பெற்றதாக மேலும் இந்தியத் தரப்பில் அறிவிக்கப்பட்டது. [அ-எ]

## உதவிச் செயலாளர் சுடப்பட்டார்

கொழும்பு, அக் 11

போக்குவரத்து அமைச்சின் உதவிச் செயலாளரான டி. பியதாஸ என்பவர் தெமட்டக்கொடையில் வைத்து இனந் தெரியாத நபர்களினால் சுடப்பட்டார்.

# தொடரும் தேடுதல்

யாழ்ப்பாணம் அக் 11

அச்சுவேலி, நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால், புன்னாலைக் கட்டுவன், உரும்பராய், ஊரெழு ஆகிய பகுதிகளில் அமைதிப் படையினரின் தேடுதல்நடவடிக்கைகள்நேற்றும் தொடர்ந்தன.

அதன் காரணமாக யாழ் — பருத்தித்துறை, யாழ் -- பலாலியூடாக நடைபெறும் பஸ்சேவைகள்இரண்டுதினங்களாக தடைப்பட்டிருந்தன

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பஸ்சேவை நேற்றுக்கொடிகாமம் ஊடாக நடைபெற்ற போதிலும் பெரும் சிரமங்களுக்குமத்தியிலேயே பஸ்யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தது.

இதேவேளைதூர இடங்களுக்கானபஸ்சேவைகள் சிலவும் கோப்பாய் — கைதடி வீதியூடாகவே நடைபெற்று வருகின்றன (அ-10)

## சயனைட் அருந்தி மரணம்

யாழ்ப்பாணம், அக் 11

சரசாலையில் இந்திய அமைதிப் படையினர் சுற்றிவளைப்பு நடத்திய போது விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சயனைட் அருந்தி மரணமடைந்தார்.

கடந்த 9 ஆம் திகதி வண்ணாத்திப்பாலத்துக்கு அருகாமையில் இச்சம்பவம் நடைபெற்றது

விடுதலைப் புலிகளின் கைதடிப் பிரதேசப் பொறுப்பாளர் 2ஆவது லெப்ரினன்ட் சிவா குப்புசாமி [சிவசிறீதரன்]என்பவரே மரணமடைந்தவராவார். (இ-10)

## வடமத்திய...

[1ம்-பக்கத் தொடர்ச்சி]

ணிக்கை 43 என்று அறிவித்தது

கொலை செய்யப்பட்டவர்களில் அனேகமானோர் ஆழ்ந்த நித்திரையில் இருந்த போது இந்தச்சம்பவம் நடைபெற்றது.

கொலைஞர்களைத்தேடும் பணியில் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (அ-எ-க)

## வழமைக்கு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மக்கள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டு, போக்குவரதது வழி மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

எனினும் நேற்றுவீதித் தடைகள் அகற்றப்பட்டு மக்கள் கட்டுப்பாடின்றி நடமாட அனுமதிக்கப்பட்டனர். (க)

## மரண அறிவித்தல்

### குப்புசாமி சிவசிறீதரன் (சிவா)


குப்புசாமி சிவசிறீதரன் சிவா) 9-10-88 ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வண்ணாத்திப் பாலத்தில் அகால மரணமடைந்தார்.

அன்னாரது பூதவுடல் இன்று (11-10 88) சாவகச்சேரி தபால்நிலைய வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து காலை 11 மணியளவில் சாவகச்சேரி கண்ணடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை அனைத்துத் தமிழீழ மக்களும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்!
குப்புசாமி

(6993)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 11-10-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 11th October 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org